Registered No. M. 878.

பூர்ணசந்திரோதயம்.

A Tamil Monthly Journal

Devoted to Theosophy, Religion, Science, Art and Civilization

தொகுதி 5 } 1915௵ ஜனவரி௴ 15௳ / ஆனந்த௵ தை௴ ௩௳ { பகுதி 9

அ ரங்கஸ்வாமி ஐயர், B A, B.L., F.T. S, பத்திராதிபர்.

வருஷ சந்தா ரூ 2. தனிப்பிரதி அணா 4.

மதுரை:

விவேகபாநு அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பெற்றது.

Copy Right Reserved.

பொருளடக்கம்.

CONTENTS.

பக்கம்.

1. தற்கால நிலைமை—அ. ரங்கஸ்வாமி ஐயர். 321
From the Editor—A. Rangaswamy Iyer.

2. வருங்கால லக்ஷ்யங்கள்—ஸேவாநந்தன். 329
Ideals of the Future—Sevananda.

3. நேர்மையான வித்யாப்யாஸ முறை—R. பஞ்சாபகேச ஐயர். 333
True Education—R. Panchapakesa Iyer.

4. மாஹாத்மாக்கள்—வஸந்தாநந்தன். 342
Masters—Vasanthananda

5. புஸ்தக வரவு.
Review of Books.
6. பத்திரிகை வரவு.
Review of Papers.
7. ஸமாசாரம்.
News.
(5–7) ஸேவாநந்தர். Sevananda. 348

8. தியானக்கிரம விஷயம்—K. S. இராமசந்திர ஐயர்.
Meditations—K. S. Ramachandrier.

Ready for Sale.

The English Translations of:—

Thirty Minor Upanishads Rs. 3-8-0

Laghu Yoga Vasishta Rs. 2-0-0

Professor Bergson & the Hindu Vedanta. Rs. 0-4-0

without postage.

The above Upanishads, except one or two have never before been published in a book-form. Please apply to:—

K. Narayanasamy Iyer Esq.

Theosophical Society, Adyar, Madras.

317

பூர்ணசந்திரோதயம்.

தொகுதி 5 } 1915௵ ஜனவரி௴ 14௳
ஆனந்த௵ தை௴ 1௳ { பகுதி 9

தற்கால நிலைமை.

சென்னை சட்ட நிரூபண சபையில் Hon வி. யஸ். ஸ்ரீநிவாஸ சாஸ்திரியாரவர்கள், ஸ்திரீகளுக்கு பிரௌடையான பின் விவாஹமானால் அவ்விவாஹம் சட்டத்திற்கு ஒத்திருக்கிறதென்பதை ஸ்திரப்படுத்த ஒரு மசோதாவைப் பிரேரேபித்திருக்கின்றனர். சென்னை இராஜதானியில் ஹிந்து லாவை (Law) அநுஸரிக்கும் ஜனங்களை யுத்தேசித்து இம்மசோதா கொண்டுவரப்பட்டிருக்கிறது. இச்சட்டம், ஹிந்துக்களின் ஆசாரங்களில் பிரதானமான விவாஹத்தைப்பற்றிய தாகையால், இச்சட்டம் எல்லா ஹிந்துக்களாலும் கவனிக்கத்தக்கது.

*
* *

சுமார் 80,000 வருஷங்களுக்கு முன் வைவஸ்வத மநுவானவர், மானிட வர்க்கத்தின் நாலாவது வகுப்பினர்களிலிருந்து சில குடும்பஸ்தர்களைப் பிரத்யேகப்படுத்தி, தற்காலத்தில் அட்லாண்டிக் மஹாஸமுத்திரத்தில் மூழ்கிக் கிடக்கிறதும், முற்காலத்தில் மேற்

கூறிய நான்காவது வகுப்பினர்களாகிய தைத்யர்களின் ராஜ்யமுமான துவீபத்திலிருந்து, எகிப்து, அராபியா தேசங்களின் வழியாய் அவர்களை வழிநடத்தி, ஆசியாக்கண்டத்தின் மத்தியப் பிரதேசத்தில் குடியேற்றினர். இவ்விடத்தில் அவர்கள் மநுவினுடைய ஆளுகையால் அபிவிருத்தியை யடைந்து, பலத்திலும் செல்வத்திலும் இஹபர வைபவங்களிலும் பிரக்யாதியைப் பெற்று, அநேகவாயிர வருஷம் தழைத்தோங்கி வந்தனர். அவர்களின் ஆசாரங்கள் மநுவாலும் அவர் பரம்பரையாலும் ஸ்தாபிக்கப்பட்டன. அத்யந்த விசுவாசத்துடன் ஜநங்களால் அநுஸரிக்கப்பெற்றும் வந்தன.

***

இவர்களால் ஸ்தாபிக்கப்பட்ட ஆசாரங்களுக்கு ஆதாரமான தத்துவங்கள் என்னவெனில், ஜீவன் ஈசுவரனுடைய அம்சமென்பதும்; ஜீவன் அநேக ஜன்மங்களை யெடுத்து விகாஸ முறையில் மேன்மேலும் அபிவிருத்தியை யடைகிறனென்பதும்; அவ்விகாஸமுறையில் செல்ல பக்தி, கர்மம், ஞானம் என்ற மூன்று வழிகள் ஏற்பட்டிருக்கின்றன வென்பதும்; அம்மூன்று மார்க்கங்களும் ஜீவனின் முக்குணங்களாகிய இச்சை, கிரியை, ஞானம் இவைகளுக்கேற்ப அமைந்திருக்கின்றன வென்பதும்; ஜீவன் பூ:, புவ:, ஸுவ:, மஹ:, ஜந:, தப:, ஸத்ய லோகங்கள் என்ற ஏழுலகங்களிலும் அந்தந்த லோக விஷயங்களை யுணர அந்தந்த லோகத்திற்குரிய பிரகிருதி திரவியத்தாலமைந்த கோசங்கள், உபாதிகள் என்று கூறப்படும் சரீரங்களைக் கைப்பற்றுகிற னென்பதும்; அச்சரீரங்களில் அன்ன, பிராண, மநோமய கோசங்களை மட்டும் ஒவ்வொரு ஜன்மத்திலும் நூதனமாய் அமைக்கப்பெற்றே உபயோகிக்கிறன் என்பதும்; ஒவ்வொரு ஜன்மத்திலும் அந்த ஜீவனது முந்திய ஜன்மங்களின் வாஸனையால் ஏற்பட்ட குணகர்ம விபாகங்களுக்குத் தக்கவாறு பிரஹ்ம க்ஷத்திரிய வைசிய சூத்திர என்ற நாலு வர்ணங்களில் ஒரு வர்ணத்தின் தர்மங்களை அவலம்பிக்கிற னென்பதும்; விகாஸ முறையில் அவன் செல்லும் பாதை பிரவிர்த்தி மார்க்கம், நிவிர்த்தி மார்க்கம் என்று இருவகைப் படுமென்பதும்; அவைகளில் பிரவிர்த்தி மார்க்கம் என்பது ஜீவன் தன் பற்பல சக்திகளை

விருத்திசெய்து கொள்ளுமாறு, பிரபஞ்ச விஷயங்களை யநுபவிப்ப தென்பதும்; அது விகாஸ முறையின் முற்பாகமென்பதும்; நிவிர்த்தி மார்க்கமாவது பிரபஞ்ச விஷயாநுபவம் குன்றி பஹிர்முகமாய்ச் செல்லுதலை விட்டு, அந்தர்முகப்பட்டு, அதாவது, உள்நோக்கி, ஆத்மதரிசனம் அடைய முயலுகின்ற பிற்பாக மென்பதும்; ஒவ்வொரு மானிட ஜன்மத்தின் முற்பாகம் பிரவிர்த்தி மார்க்கத்திற்கு ஒத்த பிரஹ்மசரிய, கிருஹஸ்த ஆசிரமங்க ளடங்கியதென்பதும்; அதின் பிற்பாகம் நிவிர்த்தி மார்க்கத்திற்கு ஒத்த வாநப்பிரஸ்த, ஸந்யாஸ ஆசிரமங்க ளடங்கியதென்பதும்; மனிதர்களின் தற்கால விகாஸ முறையில், இச்சையைப் பிரதான அம்சமாகக் கொண்ட, ஸ்திரீயின் சரீரத்தையும், ஞானத்தைப் பிரதானமாகக் கொண்ட புருஷனின் சரீரத்தையும், ஜீவன் தன் வெவ்வேறு சக்திகள் ஒழுங்காக வெளித் தோன்றுமாறு, பற்பல ஜன்மங்களில் மாறிமாறி வகிக்கிறுனென்பதும்; தற்காலத்தில் ஸ்திரீ புருஷ பேதங்களால் குடும்பம் ஏற்பட்டு, அதன் மூலமாய் ஜீவர்களின் சக்திகள் விகஸிக்கத் தக்கன வென்பதும்; அவர்கள் விகாஸ முறையில் அடையவேண்டியவைகள் நான்கு புருஷார்த்தங்களாகிய அறம், பொருள் இன்பம், வீடு என நான்குவகைப்படும் என்பதுமாம் என்று சொல்லத்தகும்.

***

மேற்கூறிய விஷயங்கள் தனித்தனியாய் நில்லாது ஒன்ருெடொன்று ஸம்பந்தித்திருப்பன வாதலால் இப்பூலோக வாழ்வைத் தழுவி ஏற்படும் ஆசாரங்கள் இவ்வுலகத்தில் மட்டும் பலனை யளிப்பதல்லாமல், இதர வுலகங்களிலும் ஜீவனுக்கு ஸாதக பாதகங்களை யுண்டுபண்ணுகின்றன. ஆகையால் மேற்கூறிய விஷயங்களை ஸ்வாநுபவத்தால் நன்ருயறிந்தவர்களான மநு முதலிய பெரியோர்களால் தர்மசாஸ்திரங்கள் ஆரியர்களுக்கு உபதேசிக்கப்பட்டன. அவ்விஷயங்களைத் தெரிந்து கொள்ளாமலும், அவைகளை மறுத்தும் சிலர் ஆசார சீர்திருத்தங்களைப் பேசுவதும், ஆசாரங்களை யழிப்பதில் முயல்வதும் சில சமயங்களில் விபரீதமாக முடியும் என்றே சொல்லலாம்.

***

ஆனால் உலகமும், உலகத்திலுள்ள ஜனங்களும், அவர்களுடைய நாகரிகம், விவேகம் முதலியனவும் ஒரே நிலைமையில் நில்லாது, மாறிக்கொண்டே வருதலால், அவர்களுக்கேற்ற ஆசார விதிகளும் காலவியற்கையை யநுஸரித்தே மாறும். "அவ்வித மாறுதல்கள் காலவியற்கைக்குத் தக்கவாறு ஸம்பவிக்கும், அவைகளைப்பற்றி நாமேன் கவலை கொள்ளவேண்டு" மென்று நினைத்துக் கவனியாமலிருப்பின், அம்மாறுதல் ஒழுங்கினமாய், முன் சொல்லிய பிரகாரம் ஒன்றோடொன்று இசைந்துகொண்டிருக்கும் பல விஷயங்களுக்கொவ்வாமலும், கடலிற்காற்றின் வேகத்தால் செலுத்தப்பட்ட கப்பல் எவ்வாறு தாறுமாறாய்ச் செல்லுமோ, அவ்வாறு நேர்வழியாய்ச் செல்லாமலும் பல கெடுதல்களை யுண்டாக்கும். ஆகையால் 'பழையன கழிதலும் புதியன புகுதலும்' உலகமாறுதலில் ஸாதாரணமாய் ஸம்பவிக்கக் கூடியன. அவ்விதம் புதிதாய் வருபவைகளை அவைகள் புதியன என்ற காரணத்தால் மட்டும் தள்ளாமல், அவைகளில் எவைகள் நம்முடைய தர்மசாஸ்திரங்களின் உயர் நோக்கங்களுக்கு ஒத்திருக்கின்றன வென்றும், எவைகள் அவைகளுக்கு விரோதமா யிருக்கின்றன வென்றும், அவைகளில் எவைகள் நம்முடைய ஸநாதன தர்மத்தின் தத்துவங்களை யநுஸரித்திருக்கின்றன வென்றும் நம்முடைய அறிவாலும் ஞானத்தாலும் ஆராய்ந்து பார்த்து விலக்கத் தக்கவைகளை விலக்கி ஏற்றுக்கொள்ளத் தக்கவைகளைக் கைக்கொள்ளுதலே விவேகத்தின் லக்ஷணமாம். ஆகையால்தான் தர்மசாஸ்திரத்தில், கால இயற்கைக்குத் தக்கவாறு மாற்றப்படவேண்டி யிருந்தால் பெரியோர்கள் கூடி அம்மாறுதல்களைச் செய்யவேண்டுமென்று விதிக்கப்பட் டிருக்கிறது.

***

கிருஹஸ்தாசிரமம் பிரஹ்மசர்யாசிரமத்திற்குப் பிறகு அநுஸரிக்கத் தக்கது என்று தர்மசாஸ்திரங்கள் கூற, தற்காலத்தில் வித்யாசாலையில் கற்கும் மாணாக்கர்களுக்கு விவாஹம் செய்யப்பட்டு, அவர்கள் தர்மசாஸ்திரங்களுக்கு விரோதமாய் இரண்டு ஆசிரமங்களையும் ஏககாலத்தி லடைந்து, அந்த இரண்டு ஆசிரமங்களின் தர்மங்களையும் அநுஸரிக்காதவர்களாகிறார்கள். வானப்பிரஸ்

தாசிரமத்தைக் கைக்கொள்ளத்தக்க விருத்தர்கள் பத்து வயது கன்னிகைகளை மணம்பூண்டு தலைகீழாக கிருஹஸ்தாசிரமத்தைக் கைப்பற்றுகிறார்கள்.

* * *

விவாஹகாலத்தில் உபயோகப்படுத்தப்படும் வேத மந்த்ரங்களினால், விவாஹம் செய்யப்படுபவர்கள் பூர்ண்பிரக்ஞையுடன் கிருஹஸ்தாசிரமத்தில் செல்லத்தகுந்த வயதுள்ளவர்களாக விருக்கவேண்டுமென்று புலப்படுகிறதே யல்லாது, அப்பிரக்ஞையே யில்லாத குழந்தைகளா யிருக்கவேண்டுமென்று தோன்றவில்லை. தற்காலத்திலும் ஹிந்துக்களில், சில மேல்ஜாதியார்களைத் தவிர, பெரும்பான்மையாக, பெண்களுக்குப் பிரௌடையான பிறகுதான் விவாஹம் செய்யப்படுகிறது. வேதமந்த்ரங்களிலிருந்து ஊகிக்கப்படும் முறை இவ்வாறிருக்க, ஹிந்துக்களில் சில மேல்ஜாதியார்களுக்குள் பெண்கள் பிரௌடை யாவதற்குமுன் விவாஹம் செய்யப்பெறலாம் என்ற நியமம் எவ்விதமாக ஏற்பட்டது?

* * *

முற்காலங்களில் இந்தியாவில் பல சிற்றரசர்கள் ஒருவரோடொருவர் போர் புரிந்து கொண்டிருந்த நிலைமையில், பொது ஜனங்களுக்குள் ஸமாதானக் குறைவும் அவர்களின் சொத்துக்களுக்கு ஸாவதானக் குறைவும் ஏற்பட்டிருந்தன. ஆகையால் குழந்தைப் பருவத்தில் ஒரு பெண்ணின் விவாஹத்தை நடத்துவதின் மூலம், அப்பெண்ணுக்கு ஒரு ரக்ஷகனை யேற்படுத்தி, அப்பெண்ணின் க்ஷேமம் கருதப் பெற்றது. ஹிந்துக்களுடைய பூர்வ ஸம்ப்ரதாயத்தில் குடும்பம் எத்துணை பெருகிய போதிலும், ஏக குடும்பமாய் அனைவரும் ஒத்து வாழ்தலே வழக்கமாயிருந்தமையால், நாட்டுப் பெண்களும் தம் இளமைப் பருவத்தில் அக்குடும்பத்தைச் சேர்ந்தால் தான் அக்குடும்பத்தின் பொது சமாதானத்தின் அபிவிருத்திக் குரிய குணங்களைத் தம்மிடம் அமைத்துக் கொள்ளக் கூடும். இவ்வித காரணங்களினால் ஏற்பட்ட பால்ய விவாஹத்தினால் சில கெடுதிகள் நேரினும் நன்மைகள் அதிகரித்திருந்தன. ஆகையால் பொதுவாக

ஸ்மிருதிகர்த்தாக்கள் இவ்வித விவாஹத்தை நலமென்று கொண்டாடினார்கள்.

***

சுருதி வாக்யங்களாலும், பிரகிருதியிலுள்ள சிருஷ்டி வர்க்கங்களின் இயற்கையை ஆராய்ந்து அவ்வாராய்ச்சியினின்று ஸ்வதஸ்ஸித்தமாய் வெளியாகிற ஈசுவராக்ஞையை நிர்ணயித்திருக்கிற சாஸ்திரங்களாலும், சரீர ஆரோக்யமும் மனோதிடமும் உள்ள பிரஜைகள் உண்டாவதற்கு, பெற்றோர்கள் விவாஹகாலத்தில் உரிய சரீர பக்குவமுள்ள வயதினர்களாக இருத்தல் வேண்டுமென்று வெளியாகிறது. முற்காலத்தில் இவ்விதியை யநுஸரிப்பதற்கு விருத்தமாயிருந்த நிலைமைகள் தற்காலத்தில் மறைந்து விட்டன. தவிரவும் பெண்கல்வி அவசியம் என்ற பொது நோக்கம் நமக்குள் ஏற்கனவே பரவியும், இன்னும் அதிகமாக நாளுக்கு நாள் பரவக் கூடிய நிலைமையிலும் இருப்பதால், குழந்தைகளின் விவாஹம் அக் கல்விக்கு ஒரு தடையாக ஏற்படாமலே பிரௌடை யானபின் பெண்களுக்கு விவாஹம் செய்யப் பட்டால், அவ்விவாஹம் சட்டத்திற்கு விரோதமன்று என்பதை ஏற்றுக் கொள்ளக் கூடிய, மேற் சொல்லிய மசோதாச் சட்டம் ஊர்ஜிதத்திற்கு வர வேண்டியது அவசியமாயிருக்கிறது.

***

சென்ற டிஸம்பர்மீ' கடைசி வாரத்தில் சென்னை நகரில் பல சங்கங்கள் கூடின. பிரஹ்மக்ஞான ஸங்கத்தின் மஹாஸபை (T. S. Convention) அம்மாசம் 26உ முதல் அடையாற்றில் கூடிற்று. அன்று மாதுஸ்ரீ அன்னிபெஸண்டு அம்மையார் "பிரஹ்மக்ஞானஸங்கத்தின் வேலை" என்ற விஷயத்தைப் பற்றி உபந்யாஸம் செய்தனர். தாம் முதன் முதல் இந்தியாவுக்கு வந்து இந்தியாவுக் குழைத்த சென்ற 24 வருஷங்களில், முதலில் ஹிந்துமதத்தைப் பலப்படுத்தி, அதினுடைய ஸாரங்களை வெளியிட்டு, அதின் மூலமாய் ஸநாதன தர்மத்தை யநுஸரித்தல் மேன்மையான தென்று ஹிந்துக்களுக்கு வற்புறுத்தி, அதன் பிறகு இந்திய வாலிபர்களுக்கு லௌகிக விஷ

யங்களிற் கொடுக்கப்படும் கல்வியுடன் மதப்பயிற்சியும் கொடுக்கப் பட வேண்டுமென்று பிரஸங்கங்கள் மூலமாகவும் பத்திரிகைகள் மூலமாகவும் எடுத்துக் காட்டியும், அம்முறையை காசியிலுள்ள ஹிந்துப் பிரதானக் கல்விச்சாலை முதலிய வித்பாசாலைகளில் அநுஷ்டானத் திற்குக் கொண்டு வந்தும், பிறகு தம்முடைய குருவும், க்ஷத்ரிய ஜாதியைச் சேர்ந்தவரும், பிரஹ்மக்ஞான ஸபையின் உண்மையான ஸ்தாபகரில் ஒருவருமாகிய ரிஷியின் ஆக்ஞைப்பால் தாம் ஆசார சீர் திருத்தத்திலும் இராஜாங்க சீர்திருத்த விஷயத்திலும் பிரவிர்த்தித் திருப்பதாகவும், பிரிடிஷ் ராஜ்யமண்டலத்தில் இந்தியாவின் நிலைமை மேன்மை பெறுதற்குமுன், அதற்கேற்ப இந்தியர்கள் மதம், கல்வி, ஆசாரம், பொது நன்மை முதலிய விஷயங்களில் சீர்திருத்தம் அடைய வேண்டியதென்றும், ஆனால் இவ்விஷயங்களில் தாம் கைக் கொண்டிருக்கும் பிரவிர்த்திகள் பிரஹ்மக்ஞான ஸபையின் அக்ரா ஸநஸ்தானத்தினின்று அல்ல வென்றும், ஆகையால் இவ்விஷயங் களில் பிரஹ்மக்ஞான ஸபையின் அங்கத்தினர்கள் அவரவர்களுக்கு உசிதமாகத் தோன்றும் அபிப்பிராயங்களைக் கைக்கொள்ளத் தடைப் பட்டிருக்க வில்லை யென்றும் இப்பிரஹ்மக்ஞான ஸபையானது இவ் விஷயங்களில் பொது நிலைமையை வகித்துக் கொண்டிருக்கிறதென் றும் எடுத்துரைத்தனர்.

* * *

சென்ற டிஸம்பர்மீ 27வ் ஸ்ரீமான் ஸி. ஜீனராஜ தாஸரவர்கள் விகாஸ முறையைப்பற்றி மேற்றிசை சாஸ்திரிகளுடைய ஆராய்ச்சி களை குப்த வித்யையின் தத்துவங்களோடு சமரஸப்படுத்தி, சாஸ்திர உண்மைகள் மேற்றிசையில் வெளியிடப்பட்டாலும், கீழ்திசையில் பிரவசநிக்கப் பட்டாலும், அவைகள் ஒன்றோடொன்று அநுகுண மாயிருக்கின்றனவேயன்றி, விரோதமாயில்லை யென்று எடுத்துக் காட்டினர். எல்லா சாஸ்திரங்களும் கடைசியில் ஓரே முடிவாகஈசு வரனுடைய சங்கல்பங்களையே வெளிபிடுகின்றன என்றும் கூறினர்.

* * *

சென்ற டிஸம்பர்மீ 28உ அவர் "புநர்ஜன்ம தத்துவத்தின் மூலமாய் சரித்திர ஆராய்ச்சி" என்ற விஷயத்தைக் குறித்து பிர ஸங்கம் செய்தார். ஜீவர்கள் இப்புவியில் விகாஸ முறையில் மேன் மேலும் செல்லச் செல்ல எந்தெந்த ஜாதியார்கள் எக்காலம் வரை

தழைத்தோங்கத் தகுதியுள்ளவர்களாயிருக்கிறார்களோ, அது பரியந்தம் அச்சாதியார்கள் உலகத்தில் நிலைநிற்கிறார்களென்றும், ஆகையால் கால்டியா (Chaldea) பாபிலோன் (Babylon) அஸ்ஸிரியா (Assyria) எகிப்து (Egypt) கிரீஸ் (Greece) ரோம் (Rome) முதலிய பிரதேசங்கள் ஸம்பந்தமான பூர்வீக ஜாதியார்கள் வெவ்வேறு காலம் வரை இருந்து மறைந்தனரென்றும், இந்தியாவானது ஜீவர்கள் மற்ற தேசங்களில் அடையக் கூடாத அநுபவங்களைக் கொடுக்கக் கூடிய ஜன்மபூமியாக ஏற்படுவதால், ஸநாதனதர்மமும் இக்கால பரியந்தம் நீடித்திருக்கிறதென்றும், பூர்வீக ரோம ஜாதியார்கள் தற்கால ஆங்கிலேயர்களாக புநர்ஜன்மம் எடுத்திருக்கின்றனரென்றும், பூர்வீக கிரேக்கர்கள் தற்கால பிரெஞ்சுக்காரர்களாகவும் மற்றலத்தீன் ஜாதியார்களாகவும் புநர்ஜன்மம் எடுத்திருக்கின்றனரென்றும்' பூர்வீக கார்தேஜ் தேசத்தார்கள் தற்கால ஜர்மானியர்களாக ஜன்மமெடுத்திருப்பது ஸம்பாவிதமென்றும் பற்பல உதாரணங்களின் மூலமாய் எடுத்துக் கூறினர்.

***

சென்ற டிஸம்பர்மீ 29உ அவர் "கலைகளின் பிரதான ஆதாரங்களைக் குறித்து" பிரஸங்கித்தனர். கலைகள், சித்திரம், சிற்பம், நாடகம், காவியம், ஸங்கீதம் இவ்விதமாக வேறுபாடுகளை அடைந்த போதிலும், அவைகள் உண்மையாகவும் நேர்மையாகவும் அப்பஸிக்கப்பட்டால் அவைகள் மூலமாய் நாம் சில பொதுத் தத்துவங்களையறிபவும்; அவைகளுக்குக் காரண பூதராயிருக்கிற ஈசுவரனையடையவும் அவைகள் வாயில்களாகும் என்று விவரித்தனர்.

***

சென்ற டிஸம்பர்மீ 28, 29, 30உகளில் இந்தியன்நாஷனல் காங்கிரெஸ் சென்னை நகரில் கூடிற்று. இப்பொழுது ஐரோப்பிய தேசங்களில் நிகழும் யுத்தத்தின் மூலமாய் உலகத்தில் ராஜாங்க விஷயமாய் நூதன மாறுதல்கள் ஏற்படுவதுமல்லாமல் உலக ஸமாதானம் பலப்பட்டும், அதின் மூலமாய் ஜகத் குருவின் வரவானது துரிதம் செய்யப்பட்டும், அவருடைய தத்துவ ஸ்வாப தேசங்களைப் பலவித கிரியைகள் மூலமாய் எடுத்துக் காட்டுந்தக்க ராஜ்யமண்டலம் உறுதிப் படுத்தப்பட்டு, அவ்விராஜ்ய மண்டலத்தில் ஆங்கில தேசத்தார்களும் இந்தியர்களும் ஒன்று சேர்ந்து உழைக்கப்போகின்றனரென்றும் இப்பத்திரிகையில் இதற்குமுன் பலகால் கூறியிருக்கின்றனம். இவ்வருஷத்தில் காங்கிரெஸ் உபசார கம்மிட்டியின் அக்கிராஸனம் வகித்த மகா-ா-ா-ஸ்ரீ ஸர். எஸ். சுப்பிரமணிய ஐயரவர்களும், காங்கிரெஸ் ஸபைக்கு அக்ராஸநாதிபதியாக விருந்த பாபு பூபேந்திரநாத் பாஸு அவர்களும் இவ்விராஜ்ய மண்டலத்தில் இந்தியாவின் வருங்கால ஸ்திதியை எடுத்துக் கூறினர்.

அ. ரங்கஸ்வாமி ஐயர்.

வருங்கால லக்ஷ்யங்கள்.

கடமை.

உலகத்தில் வழங்கிவரும் எல்லா மதங்களிலும் "கடமை" என்பதைப்பற்றி வற்புறுத்திச் சொல்லப்பட்டிருக்கிறது. இருந்தாலும் ஹிந்துமதத்தில் மட்டும் அதற்கு விசேஷமான ஒரு கௌரவமும் உன்னதமான ஒரு ஸ்தானமும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இன்ன இன்ன வகுப்பைச்சேர்ந்த மனிதனுடைய கடமை இன்ன இன்னதென்றும், ஒரே மனிதனுக்கு இன்ன இன்ன காலங்களில் அவனுடைய கடமை இன்ன இன்னதென்றும், இன்ன இன்ன முறைமையில் அவனுடைய கடமை இன்ன இன்னதென்றும், விவரமாய் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அதுதான் ஹிந்துமதத்தில் வர்ணதர்மம் என்றும், ஆசிரம தர்மம் என்றும் சொல்லப்படுகிறது. தர்மம் என்னும் பதத்திற்கு ஸாமாந்யமாய் கடமை என்று மட்டிலும் அர்த்தமல்ல. பூர்வ ஜன்மங்களில் ஏற்பட்ட அநுபவங்களால் சிறுகச் சிறுக, விகாஸத்தையடைந்து இப்போது ஒருவன் எந்த நிலையில் இருக்கிறானோ அந்த நிலையிலிருந்து அடுத்த மேல்படியில் ஏறுவதற்கு ஸாதகமான செய்கைகள்தான் அவனுடைய ஸ்வதர்மங்களாகும். பூர்வ ஜன்மங்களில் ஒருவன் எவ்வளவோ பிராணிகளுக்குத் தீங்கு செய்திருப்பான்; அல்லது அவனுக்கு எவ்வளவோ பிராணிகள் தீங்கு செய்திருக்கும். அவனுக்கும் அவைகளுக்கும் அவ்விதமாக ஏற்பட்ட கர்மபந்தங்களை இந்த ஜன்மத்தில் தீர்த்துக் கொண்டால் மட்டிலும் அவன் மேற் போக ஸாத்தியமாகும். ஆகையால் அவைகள் தீரக்கூடிய வழியில் அவன் நடப்பதுதான் அவனுடைய தர்மமாகும். அந்தப்படி ஒவ்வொருவனும் அவனவனுக்கு ஏற்பட்ட தர்மம் இன்னதென்று தெரிந்துகொள்வதுதான் கஷ்டம். அதைத் தெரிந்து கொண்டானேயானால், அப்பால் அதை யநுசரித்து நடந்து மேன்மையடைவது சுலபம். ஒருவன் நமக்குச் செய்யவேண்டிய கடமைகளைச் செய்யாவிட்டால் நாம் அவனு

---

* நக்ஷத்திர தூதன் (Herald of the Star) என்னும் ஆங்கிலப் பத்திரிகையின் 1914௵ ஜூன் ௴ சஞ்சிகைக்கு, மாதுஸ்ரீ அன்னிபெஸண்ட் அம்மாளால் எழுதப்பட்ட வியாஸத்தினின்று தமிழில் எடுத்தெழுதப்பட்டது.

க்குச் செய்யவேண்டிய கடமைகளைச் செய்யாமலிருப்பதற்கு அது ஒரு தகுந்த காரணமாகமாட்டாது. நமக்கு ஏற்பட்ட தர்மத்தை நாம் செய்யாததற்காக, உள்ள பலனை நாம் அநுபவித்துத்தான் தீர்க்க வேண்டியதா யிருக்கும்.

நம்மைக் காட்டிலும் வேறான ஒரு பதார்த்தத்திற்கு நாம் செய்யக் கட்டுப்பட்ட ஒரு காரியத்திற்கு கடமை என்று பெயர். எந்தக் காரியத்தை நாம் செய்யாமலிருப்பது தகுதியல்ல வென்று நம்முடைய மனச்சாக்ஷி சொல்லுகிறதோ, அதுதான் நம்முடைய கடமை. எந்தக் காரியத்தை நாம் செய்யவேண்டியதென்று நம்முடைய அந்தராத்மா கட்டளை இடுகின்றதோ அதுதான் நம்முடைய கடமை. அந்தக் கட்டளைக்கு நாம் கீழ்ப்படிந்து நடந்து, அந்தக் காரியத்தைச் செய்யாவிட்டால் நமக்கு அதிருப்தியும், ஸமாதான மின்மையும், மனக்குழப்பமும் உண்டாகின்றன. அந்தக் குழப்பமானது, நம்முடைய அந்தராத்மாவின் கட்டளைக்குக் கீழ்ப்படியாமல் நம்முடைய ஸ்தூலசரீரம், காமசரீரம், அசுத்தமனஸ் முதலானவைகள் கலகம் செய்கின்றன வென்பதை நாம் அறிவதனால் உண்டாகும் உணர்ச்சியேதவிர வேறில்லை. நம்முடைய கடமைகளைச் செய்யாதபொழுது நமக்கு அவ்விதமான மனக்குழப்பம் உண்டாகாவிட்டால் நம்முடைய அந்தராத்மாவானது போதுமானபடி விகஸிக்கவில்லை யென்றும், நாம் தகுந்தபடி பக்குவத்தையடைய வில்லையென்றும், நமக்கு சித்த சுத்தி சரியானபடி ஏற்படவில்லை யென்றும் தெரிந்துகொள்ளலாம். அப்பால் நாம் சிறுகச்சிறுக அநேக இன்பதுன்பங்களை அநுபவித்து அத்துக்கங்களை யடைந்தபின்பேரில் நமக்கு நேரும் சகல துக்கங்களுக்கும் துன்பங்களுக்கும் காரணம் நாம் செய்யவேண்டிய கடமைகளைச் செய்யாதிருத்தல்தான் என்று அநுபவத்தால் நமக்குக் கடைசியில் தெரியவரும். இவ்வுலகத்தில் ஸகலமும் ஈசுவர ஸங்கல்பத்தால் நடக்கிறதென்றும், அதைமாற்ற யாராலும் முடியாதென்றும், நாம் செய்யவேண்டிய காரியங்களைச் செய்யாவிட்டாலும், செய்யத்தகாத காரியங்களைச் செய்தாலும் அதன்பலனை யநுபவிக்காமல் தப்பமுடியாதென்றும் உணர்ந்து, வழிதப்பிநடப்பதில் விளையும் தீமையையும், துன்பத்தையும், துக்கத்தையும் சகிக்கமுடியாமல் கஷ்டப்

பட்டபின் நல்ல புத்தி வந்து, சரியானவழியில் திரும்பி, நம்முடைய கடமைகளைக் கிரமப்படி செய்ய ஆரம்பிப்போம். வண்டியில் கட்டப் பட்டிருக்கும் மாடுகள் ரஸ்தாவழியே சரியானபடி போகாவிட்டால், தார்க்கம்பைக் கொண்டு குத்தி சரியானபாதையில் நடத்தப் படுகின்றன. பகுத்தறிவுள்ள நமக்கும் துக்கம், துன்பம் முதலான தார்க்குத்துகள் எதற்காக? நம்முடைய நிலைமையை அறிந்துகொண்டு அவ்விதமான கஷ்டங்களுக்கு உள்ளாகாமல் நாம்செய்யவேண்டிய காரியங்கள் இன்னவை, செய்யத்தகாத காரியங்கள் இன்னவையென்று நாமே தெரிந்துகொண்டு, நம்முடைய கடமைகளை உத்ஸாகத்துடன் செய்து முடிப்போமானால், எவ்வளவு மேன்மையாயிருக்கும்?

வருங்காலத்தில் கடமையைப்பற்றிய லக்ஷ்யமென்னவென்றால், ஈசுவரனுடைய ஒரு அம்சமான மனிதன் ஈசுவர ஸங்கல்பத்தையே தன்னுடைய ஸங்கல்பமாகக் கொண்டு ஸர்வ பூதங்களுக்கும் ஹிதத்தைச் செய்வதான அவருடைய வேலைக்கு ஒரு கருவியாக அமைவதுதான். பிறருக்கு மனிதன் செலுத்தவேண்டிய கடமைகள் யாவும் ஈசுவர ஸங்கல்பத்தை யநுஸரித்தே ஏற்பட்டவைகளாகையால், வருங்காலத்தில் தங்கடமைகளைச் செய்பவர்கள் ஈசுவர ஸங்கல்பத்தையே நிறைவேற்றுபவராவர். ஆதலால் கடமைகளைச் செய்பவர்கள் மநமகிழ்ச்சியுடன் செய்வார்களேயன்றி, நிர்ப்பந்தத்திற்குப் பயந்து செய்யமாட்டார்கள். ஆவலுடன் கடமைகளைத்தேடி நாடுவார்களேயல்லாது, அவைகளைச் செய்யவேண்டி யிருக்கிறதேயென்ற சலிப்பு அவர்களுக் குண்டாகமாட்டாது.

அப்போதுதான் பரம முக்திக்கு ஸாதனமான கர்மயோகம் (Service) அவனுக்கு ஸித்திக்கிறது. அவனுடைய ஸங்கல்பத்திற்கு ஸ்வபாவமாயுள்ள, பரிச்சேதங்கள் விலகி, அகண்டமான ஈசுவரஸங்கல்பத்துடன் ஐக்கியம் ஏற்படுகிறது.

அப்படிப்பட்ட லக்ஷ்யத்தை யடையவேண்டுமானால், விசேஷமான முயற்சியும் நீடித்த அப்பியாஸமும் இல்லாமல் எப்படி ஸாத்தியமாகும்? வெகு கஷ்டப்பட்டு நாளடைவில் கொஞ்சங்கொஞ்சமாய்த்தான் கைகூடும். நாள்தோறும் நாள்முழுவதும் நம்முடைய

எண்ணங்களையும் ஆசைகளையும் செய்கைகளையும் உயர்நலம் அமைந்தவைகளாக இருக்கும்படி இடைவிடாமல் கவனித்துவரவேண்டும்.

நாம் ஈசுவரனாகிய பரஞ்சோதியினின்றும் உண்டான ஒரு பொறிபோலும், ஈசுவரனாகிய மஹாவிருக்ஷத்திலுண்டான ஒரு வித்துப்போலும் இருக்கிறோம். ஆகையால் அநுகூலமான ஸாதனங்கள் ஏற்படுமானால், பொறிவளர்ந்து ஜ்வாலையாவதுபோல, நாமும் ஈசுவரனுடைய அநந்த சக்திகளைப் பெறலாம். வித்து முளைத்துத் தழைத்து மரமாவதுபோல, நாமும் நமக்குள் மறைந்திருக்கும் ஈசுவர ஸம்பத்துக்களையும் மகிமைகளையும் வெளியிடலாகும். மொட்டானது பக்குவகாலம் வந்தவுடன் எப்படி விகஸித்து அழகிய ரூபத்துடனும், சுகமான வாசனையுடனும் பொருந்திய புஷ்பமாகிறதோ, அதுபோல நாமும் தகுந்த பக்குவத்தை யடைந்தவுடன் ஈசுவரனுடைய ஸகல கல்யாண குணங்களையும் பெறலாகும். நாம் ஈசுவரனுடைய ஒரு அம்சமென்றும், நாம் வேறு ஈசுவரன் வேறு அல்லவென்றும்நாமேஈசுவரனென்றும்பிரதிதினமும் த்யானம்செய்துவருவோமானால் நாமே ஈசுவரனென்ற ஸ்வாநுபவம் வந்துவிடும் என்பதில் தடையில்லை. நாம் நினைக்கவாவது, அந்தப்படி ஆகிவிடவாவது! என்று ஸந்தேகம் ஜநிக்கக்கூடும். ஆனால்பிடிவாதமாய் அந்தமாதிரி ஸங்கல்பித்து வருவோமானால், முதலில் கொஞ்சம் தோன்றித் தோன்றி மறைந்து, அப்பால் நிரந்தரமான ஸாக்ஷாத்கார அநுபவம் உண்டாகிறது. அந்த அத்வைத நிலையில்தான் ஈசுவர ஸங்கல்பமும் நம்முடைய ஸங்கல்பமும் ஒன்றுபட்டு நாம் செய்யவேண்டிய கடமைகளை நிறைவேற்றுவது நம்முடைய ஸ்வபவதர்மமாக ஏற்படும். அப்போதுதான் நாம் நம்முடைய கடமையை நம்முடைய தலையில் தாங்கும்சுமையென்று எண்ணிவருந்தாமல், நமக்குச்சூடக் கிடைத்த கிரீடமென்று எண்ணி ஆநந்தமாய்ச் செய்வோம்.

ஸேவாநந்தன்.

நேர்மையான வித்யாப்யாஸ முறை. *

லோககுருவின் வரவையேற்க நாம் ஆயத்தம் செய்யும் முறையில், நம்குழந்தைகளைச் சரிவரப் பழக்குவதைவிட முக்கியமான காரியம் வேறொன்றுமேயில்லை. ஏனெனில், இப்பொழுது குழந்தைகளாயிருப்பவர்கள் சில வருஷங்கள் செல்லுங்கால், முதிர்ந்த பருவமடைந்த புருஷர்களும், ஸ்திரீகளுமாகி விடுவார்கள். லோககுரு எழுந்தருளும்பொழுது அவர்களுக்குச் சரியான பருவம் வந்துவிடும். அப்பெரியார் வருங்காலத்து, அவரைச் சூழ்ந்து நின்று, அவருக்குப் பரமபக்தர்களாவோர்களில் நல்ல உழைப்பாளிகளாயும் மகாபலசாலிகளாயும், இருப்போர்களில் அநேகமாய் எல்லோரும் இப்போது பெற்றோர்களிடத்தும் தாதிகளிடத்தும், உபாத்தியாயர்களிடத்தும் வளர்ந்து வருகின்றார்கள். ஆகையால், தற்காலத்திய குழந்தைகளைச் சீருற நடத்திவரவேண்டுவது அப்பரமர் வருஞ் செய்தியை நம்பும் ஜனங்களுக்கு அதிமுக்கியமான காரியமன்றோ?

லோககுரு சமீபத்தில் தோன்றுவாரென்ற விஷயத்தின் கருத்தை நாம் யோசிக்குமிடத்து, தற்காலத்தில் வித்தியா இலாகாவில் நடந்துவரும் வித்யாப்யாஸ முறைகளில் மெத்தவும் குறைவுகள் உள்ளன என்பது விளங்குகின்றது. பள்ளிக் கூடங்களில் கற்பிக்கப்படும் பாடங்களெல்லாம் பிள்ளைகளுக்குச் சற்றேனும் தேவையானவைகளேயல்ல; அவற்றைக் கற்பிக்கும் வழிகளும் வழக்கம் மாறுபவைகளாக இருப்பதோடு கூட, மிகவும் கண்டனஞ் செய்யத்தக்கவைகளே.

வித்யாப்யாஸம்(Education) என்ற பதமானது (ஆங்கிலபாஷையில்) குழந்தைகளிடம் மறைந்திருக்கும் சக்திகளையெல்லாம் விகஸிக்கச் செய்வது (வெளியே இழுப்பது) எனப் பொருள்படும். இக்காலத்திலோ அப்பதத்தின் பொருளை நாம் முற்றிலும் மறந்து விட்டோமெனத் தோன்றுகிறது. தற்காலத்திய உபாத்தியாயர்கள்

* நக்ஷத்ர தூதன் (Herald of the Star) என்னும் ஆங்கிலப்பத்திரிகைக்கு ஸ்ரீமான் லெட்பீடர் அவர்களால் எழுதப்பட்ட வியாஸம் தமிழில் எடுத்தெழுதப்பட்டது.

குழந்தைகளிடம் குப்தமாயிருக்கும் சக்திகளை வெளியே இழுக்கப் பிரயத்தனப்படுகிறார்களில்லை. ஆனால் அவர்கள் செய்வது என்னவெனின், ஒன்றுக்கொன்று சம்பந்தமில்லாததும், கிரஹிக்க முடியாததும், பிள்ளைகளுக்கு யாதொரு பிரயோஜனமும் விளைக்காததுமான விஷயங்களை யெல்லாம் தனியாய்த் தேர்ந்தெடுத்து, அவர்கள் மூளையில் திணிக்கின்றார்கள். அத்தகைய கொள்கை (புத்தி) தவறாயிருப்பதுடன், கெடுதலையும் விளைவிக்கின்றது.

குழந்தையின் மநம் ஓர் வெறுமையான கூடல்ல; நாம் வெளியேபார்க்கும் மூடியல்ல, அது உள்ளிருக்கும் பருப்பு; அது சரீரமன்று, ஆனால் ஆன்மா; அது ஈசனெனும் பரஞ்சோதியின்ஓர்சுடர், கடவுளின் ஓர் அம்சம் ஆனதால், வித்யை கற்பிப்போருடைய கடமை யென்னவெனின் பிள்ளைகளிடம் மறைந்திருக்கும் அத்தெய்விக சக்தியை மலரச் செய்வதும், அவர்களிடமுள்ள அச்சுடரைத் தெய்வீக அன்பெனும் ப்ரிசுத்த ஜோதியாகப் படரச்செய்வதுமே. இதுவே நேர்மையான வித்யாப்யாஸ முறையின்லக்ஷணம். இதுகட்டுரையன்று, கிட்டுவதற்கில்லாத உயர்நோக்க மன்று, கவிசாதுரியமானவார்த்தையன்று, திண்ணமாய் நடைபெறக் கூடிய விஷயமே. ஆனதால், இக்காரியத்தில் சம்பந்தப்பட்டவர்க ளெல்லோரும் இதை ஆழ்ந்து கவனித்தல் நலம்.

பிள்ளைகள், வீட்டில் தங்கள் பெற்றோர்களிட மிருந்தும் பள்ளிக் கூடத்தில் தங்கள் உபாத்தியாயர்களிட மிருந்தும் வித்தையைப் பெறுகின்றார்கள். வாய்மொழியான உபதேசத்தால் மாத்திர மல்லாது, சொன்ன வற்றைப் பிரத்யக்ஷமாய் அநுஷ்டித்துக் காட்டுவதாலும், அவர்கள் விஷயங்களைத் தெரிந்து கொள்கிறார்கள். அதாவது போதனையால் மாத்திரம் நாம் அவர்கட்குக் கற்பிக்கின்றோமில்லை. அவர்கள்பால் நாம் வைத்திருக்கும் மனோபாவத்தாலும் (மனோநிலைமையாலும்) அவர்கட்குக் கற்பிக்கின்றோம். இம்மனோநிலை பிரதானமாய்த் தவறாயிருப்பதால் தான் நாம் அநேக பெரும் பிழைகளைச் செய்கின்றோம். ஏனெனில், குழந்தைகள் க்ஷேமத்தைவிட நம்முடைய சுயநலத்தையே நாம் அதிகமாக நினைத்துக் கொண்டிருக்கின்றோம்.

வம்ச விருத்தி செய்து குடும்ப பாரத்தை வகிக்கவாவது, உபாத்தியாயர் உத்தியோகத்தை வகிக்கவாவது நம்மைக் கட்டாயப் படுத்துபவர் ஒருவருமில்லை. ஆனால் தானாகவே ஒருவன் அக்கடமைகளை யேற்றுக் கொள்வானாகில், அவன் அவைகளைச் செவ்வனே நிறைவேற்ற வேண்டுவது அவசியம். அப்படிச் செய்யத்தவறினால், அவன் பெரிய குற்றத்திற் குள்ளாவான். இவ்விருகாரியங்களையும் ஒருவன் நேராகச் செய்து முடிக்கவேண்டுமென்றால், சற்றேனும் அவன் சுய்லாபத்தைக் கருதக் கூடாது. அவன் ஆயுள் முழுவதும் பிறர்க்கென்றே அர்ப்பணம் செய்யப் படவேண்டும். ஆனால் எல்லாருமே இதைச் செய்வது இயலாது. தற்காலத்தில் பெற்றோர்களிலாகட்டும் உபாத்தியாயர்களிலாகட்டும் அப்படித் தங்கள் கடமைகளைச் சீராகச் செய்பவர்கள் மிகவும் சொற்பமானவர்களே. இதற்குக் காரணம்யாதெனில், அவ்விஷயம் முக்கியமானது என அவர்கள் அறிந்துகொள்ளா திருப்பதுதான். "பெற்றோர்களின் சுவாதீனம்" என்னும் விஷயத்தை அவர்கள் மிகக் கொண்டாடுகிறார்கள். இவ்விந்தையான மதியற்ற கொள்கை தலைமுறைத்தத்துவமாய் (பரம்பரையாய்) அவர்களிடம் இருந்து வந்திருக்கின்றது. இச்சங்கதியில் மாத்திர மல்லாது, மற்றெதிலும் மனிதர்களுக்குக் கடமைகளைச் செய்யமாத்திரந்தான் அதிகார முண்டு.

കൎമ്മണ്യേവാധികാരസ്തേ മാ ഫലേഷു കദാചന ।

"கருமத்தைச் செய்து முடிப்பதற்கு மட்டும்தான் உனக்கு அதிகாரமுண்டு, அதன் பலனை உத்தேசிப்பது ஒருபோதும் உன் காரிய மாகாது"—பகவற்கீதை.

சுவாதந்திரியங்கள் தமக்குக் கிடையா என்பதை மறந்து விடுகிறார்கள். ஓர் ஆன்மா தங்கள் வசம் அவனது சரீரத்தை ஒப்புவித்திருக்கிறான். ஆனதால் அவ்வுத்தரவாதத்தைச் சரியாக வகித்து, அச்சரீரத்தை மேன்மையாயும் உபயோகமுள்ளதாயும், அவ்வான்மா வசிப்பதற்குத்தகுதியாயும் செய்விக்கத்தங்களாலியன்றவரை பிரயாசை எடுப்பதுதான் தங்கள் கடமையென்றும் பாக்கியமென்றும் அவர்கள் கொள்ளவேண்டும்.

இதை எப்படிச் செய்வது? இடைவிடாக் கவனத்தாலும், வற்றாத அன்பு, பூரண அநுதாபம் இவைகளாலும், சற்றேனும் சலி

யாப் பொறுமையாலுந்தான் அது சாத்தியம். குழந்தைகள் அன்பு என்னும் ஆழியில் மிதக்க வேண்டும். கடிந்து பேசும் வார்த்தைகளை அவர்கள் ஒருபோதும் கேட்கக் கூடாது. மதியீனமான காரியம் யாதொன்றையும் அவர்கள் பார்க்கக் கூடாது. குழந்தைகளின் சரீரங்களுடைய அமைப்பு, பிரகிருதியிலுள்ளவற்றி லெல்லாம், அத்யத்புதமானவிதமாக மிகவும் மென்மையான (Delicate) கருவி. ஆனதால் அவர்கட்கு ஒரு நொடிப் பொழுதேனும் அலக்ஷியம் அல்லது வெடுவெடுப்பை நாம் காண்பித்தால், அநேக வருஷகாலம் வரையில் நாம் அவர்களுடன் நெருங்கி, அந்தரங்கமாய்ப் பழகுவதற்கில்லாமற் போய்விடலாம். எக்காரணம் பற்றியும் குழந்தைகளிடம் கொடூரம் செய்தல் அல்லது கொடூரம் காட்டுதல் என்பது அதிக நிந்தைக்கிடமான பழிபாகும். சில உபாத்தியாயர்களும் பெற்றோர்களும் தங்கள் பிள்ளைகளை வருத்துவதைப்பார்த்தால் அது காட்டுமிராண்டித்தனத்தைத் தவிர வேறில்லையென்றே சொல்ல வேண்டும். அவ்வபிபாயம் நடக்கும்படி விடும் நாகரிகமற்ற தேசத்திற்கு ஓர் அழியா அவமானம் ஏற்படுகிறது. அத்தகைய காரியம் மனிதனுக்குத் தகுதியல்ல. வேண்டுமென்றே பிறரைத் துன்பப் படுத்துவது (ஹிம்சைசெய்வது) பிசாசின் செய்கையேயாகும். அது மனிதன் செய்யக் கூடியதல்ல.

"நான் பிறர் குற்றஞ் செய்யாமலிருப்பதற்குத் தானே அப்படித் தண்டித்தேன் (செய்தேன்") என ஒருவன் சொல்வானாகில், அவ்வெண்ணம் (அல்லது அச்சமாதானம்) அவன் செய்யும் தீங்குக்கு ஒருபோதும் பரிகாரமாகாது. அப்படிச் சொல்பவன் விஷயங்களைச் செவ்வையாய்த் தெரிந்துகொண் டிருப்பானாகில், தண்டனை மூலமாய் தான் நீக்குவதாய்ப் பாவித்துக் கொள்ளும் குற்றத்தைப் பார்க்கிலும், தான் செய்யும் கொடூரச் செய்கைகளின் பலன் அதிமோசமானது என அறிவான்.

பின் எவ்வித சம்பந்தம், பெற்றோர்கள், அல்லது உபாத்தியாயர்களுக்கும் பிள்ளைகளுக்கும் இருக்கவேண்டுமெனின், அது இவ்வித மிகக்கொடூரமான வழிகட்கெல்லாம் நேர் விரோதமானது. குழந்தைகளிடம் பெரியோர்களுக்குச்சாந்தமும், விழிப்பான ஆதரவும் இருத்தல் வேண்டும். பெரியோர்களிடம் குழந்தைகட்கும் பூரண விசுவா

சம் இருத்தல்வேண்டும். இருபக்கத்திலும் (பரஸ்பரம்) பரமபிரீதி (பிரேமை) இருத்தல் அவசியம். குழந்தைகள் விஷயத்தில் நமது முதற்கடமை யாதெனில், அவர்களைச் சௌக்கியமாயும் சந்தோஷ மாயும் வளர்த்து வருவதே. அவர்கள் சந்தோஷ மாயிராவிட்டால் அவர்களுக்குச் சரியான அபிவிருத்தி யென்பது சாத்தியமில்லை. பிள்ளைகள் தேக சௌக்கியத்தைப் பாதுகாத்தற் பொருட்டு, அவர்கள் சுகாதார விதிகளை யெல்லாம் சரிவர அநுஷ்டித்து வருகிறார்களாவென்றும் சத்துள்ளபோஜனம், வெளிச்சம், சுத்த ஆகாயம், தேகப்பயிற்சி ஊக்கம் இவை போதுமானவளவு அவர்களுக்குக் கிடைக்கின்றனவா வென்றும் நாம் கவனிக்கவேண்டும். அவர்கள் எதிலும் மிகச்சுத்தமாயிருக்க வேண்டும். சுகமானதும், மெல்லியதும், தளர்த்தி யானதுமான உடைகளையே அவர்கள் உடுக்கவேண்டும். புலாலுண்ணல், கள்ளுண்டல், சுருட்டு முதலியன உபயோகித்தல், இத்தகைய அநாவசியமானதும் அருவருப்பைத் தரக்கூடியதுமான வழக்கங்கள் யாவும் அவர்களிடம் இருத்தல் கூடாது.

அன்பும் பரஸ்பர விசுவாசமும் பெரியோர்களிடத்தும் பிள்ளைகளிடத்தும் உண்டானால் குழந்தைகளைச் சந்தோஷப் படுத்துவது சிரமமல்ல. ஏனெனில், நாம் குழந்தைகளை, பிரீதியாய் நடத்தினால், அவர்கள் தாமாகவே சந்தோஷமா யிருப்பார்கள். இப்படி யிருத்தலால் மாறுபடும் அவர்கள் புத்தியை யெல்லாம் எளிதில் நாம் கண்டறிந்துகொள்ளலாம். குழந்தைகள் புத்தி (குணம்) மாறின போதிலும், உபாத்தியாயர் பெற்றோர்கள் இவ்விருவருடைய குணம் ஒரு போதும் மாறப்படாது, குற்றத்தைக் காணும்போது குழந்தைகள் தாங்களே மனதில் புண்பட்டுக் கோபிக்கின்றார்கள், ஆனதால், ஓர் குற்றத்துக்காக நாம் ஓர் சமயம் அவர்களைக் கண்டித்தும், மற்றோர் சமயம் நகைத்து விட்டும் போனால் சரி தவறு என்ற அவர்களுடைய எண்ணங்க ளெல்லாம் சீர்குலைந்து போய்விடும்.

சிறு குழந்தைகளின் மனம் அநேக விதங்களில் ஓர் கண்ணாடியை யொத்திருக்கின்றது. இதைப் பெற்றோரும் உபாத்தியாயர்களும் கவனிக்கின்றார்களில்லை. அவர்களைச்சுற்றிலுமுள்ளோர்களின் எண்ணங்களும் ஆசைகளும் அவர்களுடைய மனதில் சுத்தமாய்ப் பிரதிபலிக்கின்றன. ஆனதால் குழந்தைகளுக்கு முன் நாம் மனத்

சோர்வடைவதும் கோபித்துக் கொள்வதும் அறிவீனமான ஓர் பெருங்குற்றம். மநத்தளர்ச்சியும் கோபமும் மற்றவர்களிடம் பாயும் வியாதிகள். ஆனதால் நாம் எவ்விதம் சரீர சம்பந்தமான வியாதிகள் பிறரைப் பாதிக்கா வண்ணம் எச்சரிக்கையா யிருப்போமோ அவ்விதமே, பிறரிடம் நமது மநோ வியாதிகளையும் பரவ விடப்படாது. குழந்தைகளைச் சுற்றியுள்ள விஷயங்களெல்லாம் சுலபமாய் அவர்கள் மனதில் பதிந்து விடுவதால், நாம் எக்குணங்கள் குழந்தைகளிடம் அமையக் கூடாதென நினைக்கின்றோமோ அக்குணங்களையும் அவ்வெண்ணங்களையும் நாம் நிச்சயமாய்த் தவிர்த்தல் வேண்டும். இல்லாவிடின் அக்குணங்கள் அவர்களிடம் அமைந்து விடும். ஆகையால், அவர்களிடம் பழகும் பொழுதெல்லாம் சலியாத அமைதியும் சாந்தமும் நம்மிட மிருத்தல் அவசியம். அவ்வமைதி சாமானிய ஜனங்களால் அறிதற்கரியது. குழந்தைகளுடைய குணம் முரண்டாயிருக்குங்காலத்திலும் அவர்களை நாம் சீறிக் கண்டிக்கப்படாது. அடிக்கடி மாறக் கூடிய அவர்களது புத்தியையும் சுபாவத்தையும் பூரண அறிவுடனும் அன்புடனும் தெரிந்துகொள்ளப் பிரயாசைப் படவேண்டும். ஏனெனில், அன்பு ஞான சக்தியை எளிதில் தூண்டக் கூடியது.

மேற்கூறியவையெல்லாம் குழந்தைகளிடம் நாம் பழகவேண்டிய முறைகளைக் காண்பிக்கின்றன. இவ்விதந்தான் குழந்தைகளுடைய இளஞ்சரீரத்தினுள் குப்தமாயிருக்கும் அதி உத்தம ஆன்ம சக்திகளையெல்லாம் வெளிப்படுத்த வேண்டும். ஒவ்வோர் சமயங்களில் சிற்சில விதிகளை அவர்களுக்கு நாம்உபதேசிக்கின்றோம் மற்றக் காலங்களில் நேராய் வேறு சில விஷயங்களை அவர்கட்குக் கற்பிக்கின்றோம். ஆனால் இவற்றையெல்லாம் விட நம்முடைய நடத்தையாலும் குணத்தாலும் பழக்கத்தாலுந்தான் குழந்தைகள் தங்கள் வித்தையைப் பெறுகின்றார்கள்.

முதல் முதலாய்நாம் செய்யவேண்டியது யாதெனில், நம்முடைய மதியீனத்தால் குழந்தைகள் அபிவிருத்திக்குத் தடையாக ஒன்றும் நாம் செய்யாத வண்ணம் கவனமாயிருத்தல் வேண்டும், பிறகு நமது பூரண சக்தியையும் உபயோகித்து, சீராய் அவ்வபிவிருத்தி நடந்தேறுமாறு வேண்டிய சௌகரியங்களை அக்குழந்கைளுக்கு நாம்

ஏற்படுத்திக்கொடுக்க வேண்டும். வித்தியாரம்பத்திலும் மத்தியிலும், முடிவிலும் நமது மனோ நிலைமை பேரன்பு நிறைந்ததாயிருத்தல் அவசியம். அன்பே நமது குணத்திற்கு ஸர்வ ஆதார மாயிருக்க வேண்டும். பெற்றோர்களும் உபாத்தியாயர்களும் தங்களை இப்பேரன்பின் மூர்த்திபாகவே ஆக்கிக் கொள்ளவேண்டும். அவர்கள் அப்படியிருந்தால் தான், குழந்தைகள் மீது அவர்கள் அன்பைப் பொழிய முடியும்.

இதுதான் நாம் கற்பிக்கவேண்டிய முறை. ஆனல், நாம் கற்பிக்கவேண்டிய் விஷயங்கள் யாவை? என நாம் சிந்திக்க வேண்டும். இக்காரியத்தில், நமது காலத்திற் கொவ்வாத முறைகள் பல நம்மேல் சுமத்தப் பட்டு நாம் துன்பப்படுகின்றோம். பண்டைக் காலத்தில் வழங்கிவந்த சில விதிகளை யாதாரமாய்க் கொண்டு, நமது ராஜாங்கத்தார்கள் நம்முடைய படிப்பு விஷயத்தில் சில திட்டம் (Curriculam) ஏற்படுத்தி யிருக்கின்றார்கள். ராஜாங்கத்தாருடைய நேர் பார்வையில் நமது பள்ளிக்கூடங்கள் வரவேண்டுமானல், அவர்களுடைய கோட்பாடுகள் எவ்வுளவு பயனற்றனவா யிருப்பினும், அவற்றை நாம் அங்கிகாரம் செய்யவேண்டி யிருக்கின்றது. அவர்கள் குறிப்பிடும் படிப்பின் முறையோ? உலகில் புத்தகங்களில்லாக் காலங்களில் அநுசரித்து வந்த முறை. அக்காலத்தில் புத்தகங்கள் மிகச்சுருக்கமாயிருந்தமையால், ஏதாவது விஷயம் தெரிந்துகொள்ளுமாறு சகல சங்கதிகளையும் ஞாபகத்தில் வைக்க வேண்டியிருந்தது. ஆனல் இவ்வழியோ சற்றேனும் தற்காலத்திற் கேற்றதன்று. இப்பொழுதோ, ஏதேனும் தெரிந்துகொள்ள வேண்டி வந்தால், சொல்ப பணம் செலவு செய்து, நமது வீட்டிலேயே, ஸகல விஷயங்களுக்கும் அகராதிக் கிரமமாய்த்தொகுக்கப்பட்டிருக்கிற (Encyclopædia) புஸ்தகங்களைவாங்கி வைத்துப் பார்த்துக் கொள்ளும்படியான சௌகரியங்கள் ஏற்பட்டிருக்கின்றன. ஆனதால் உபயோக மற்ற அற்ப சமாசாரங்களை யெல்லாம் புஸ்தகத்தில் பார்த்தமாத்திரம் தெரிந்து கொள்ள முடியும் போது ஏன் நாம் நமது மூளையில் அவற்றை ஏற்றிக் கொள்ளவேண்டும்?

இப்போதிருப்பதைவிட நமக்கு விஷய யூகம் அதிகமாய் பின் ஒருகாலம் ஏற்படும். அப்பொழுது எட்டுப் படிப்பு சற்று குறையும்.

அப்பொழுது நமது சிறுவர்களையும் சிறுமிகளையும், ராஜாங்கத்துக்கு ஸத்பிரஜை களாகவும், கெட்டிக்காரர்களாகவும், பிறர்க்குபயோக முள்ளவர்களாகவும் செய்யும்வழிகளை நன்றாய்த்தேடுவோம். ஏற்கன வே சீர்மையில் (Sir Baden Powell) சர் பேடன் பௌவல் என் னும் ஆங்கில தளகர்த்தரால்ஏற்படுத்தப்பட்டிருக்கும்(Boy Scoout Movement) என்ற சங்கம் அதி நேரான வழியில் பிள்ளைகளைத் தன் முயற்சியும் சாமர்த்தியமும் நேர்மையும் வாய்ந்தவர்களாகச் செய்து வருகின்றது. பிள்ளைகளுக்கு எழுதப்படிக்கத் தெரிந்திருத் தல் மாத்திரம் போதாது. காரியங்களை எப்படிச்செய்வது என்றும் தெரிந்திருக்க வேண்டும். நீந்தவும், சவாரி செய்யவும், மரமேறவும், சித்திரம் வரையவும், நெருப்புமூட்டவும், அடுப்பு மூட்டவும், சோறு சமைக்கவும், காயம் பட்டோர்க்குச் சமயோசிதமான உதவி யளிக் கவும், சூரியன் நக்ஷத்திரங்கள் இவைகளுடைய ஸ்தானத்தினால் எத் திக்கும் செல்லவும், பூமியை உழுது சாகுபடி செய்யவும், சாதாரண மான கருவிகளை யுபயோகிக்கவும், பொதுவாய் எக்காலத்தும் சமர்த் தர்களாயும் உபயோக முள்ளவர்களாயும் தேவையான காலத்தில் எவ்வித உதவியையும் புரியக்கூடியவர்களாயும் பிள்ளைகள் இருத்தல் அவசியம்.

தயாராய் உதவி செய்யும் தன்மையவர்களிட மிருப்பின் அதன் பலனாய் பிள்ளைகளிடம் இன்னும் அநேக நற்குணங்கள் அமையும். எப்போதும் உதவி புரியக் காத்திருக்கும் ஓர் குழந்தை யோக்கிய னாகவும், மெய்யனாகவும், சுயலாபத்தைக் கருதாதவனாகவும், மனிதர் களிடத்தும் மிருகங்களிடத்தும் பிரீதியுள்ளவனாகவு மிருப்பான். மிகச்சமர்த்தனாயுள்ள மனிதன், பௌருஷம், தைரியம், மரியாதை. இக் குணங்கள் பொருந்தியவனாகவு மிருப்பான். லோககுருவரும்போது அவர் நம்மிடமிருந்து இத்தகைய குணங்களைத்தான் எதிர்பார்ப் பார். ஏனெனில், நமக்குத் திறமையாய்ப்பேசத் தெரிந்திருந்தால் மாத்திரம் போதாது. அவர் அருளும் கருணைநிறைந்த உபதேசங் களையும் ஆக்ஞைகளையும் வாயால் பேசுவதுடன் நிதர்சனமாய் அநுஷ்டித்துக் காட்டி, அவற்றையெங்கும் பரவச்செய்யும் பலசா லிகளே அப்பெரியோர் காரியத்துக்குத் தேவையானவர்கள். அப் படி அவரைச்சூழ்ந்து நிற்கப்போகும் ஜனங்கள் தற்காலத்துக் குழ

1915.ஞு மார்ச்சுமீ 6 வயில் இம்மதுரைத் தமிழ்ச் சங்கத்தாரால் வழக்கம் போல் நடத்தப்பெறும் ஆங்கிலக்கலாசாலை மாணவர்களுக்காக ஏற்படுத்தியுள்ள மெற்றிக, யப். எ. பி, எ. ஆங்கிலத் தமிழ்ப் பரீக்ஷைக்கு 1915-ஞு பிப்ரவரிமீ 2வக்குள்ளும், 1915-ஞு எப்ரல்மீ 5, 6, 7,ம் தேதிகளில் நடத்தப்பெறும் தனித்தமிழ்ப் பரீக்ஷைக்கு ஆனந்தஞு மாசிமீ 4வ (15--2—15) க்குள்ளும் ஷை தமிழ்ச் சங்கபரீக்ஷைக்கு வரும் மாணவர்கள் மேலே குறிப்பிட்ட தேதிக்குள் விண்ணப்ப பாரங்களுடன் பரீக்ஷை கட்டணத் தொகையும் தவறாது இச்சங்க மாபீசு மானேஜருக்கு அனுப்பவேண்டுமென்றும், அத்தேதிகளுக்குப்பின் வரலாகும் யாவும் அங்கீகரிக்கப் படமாட்டாவென்றும் இதன்மூலம் அறிவிக்கலாயிற்று.

N. B. அரை அணா லேபிள் அனுப்புவித்து அப்ளிகேஷன் பாரத்தை இவ்வாபீசினின்றும் பெற்றுக்கொள்ளலாம்.

தர்மரக்ஷண ஸபையின் ஏழாம் வருஷோற்சவம்:—நம்முடைய நாட்டில் ஏற்பட்டுள்ள தர்மங்களைக் காப்பாற்றி அவைகள் ஒழுங்குபெற நடக்குமாறு சென்னையில் 7 வருஷங்களுக்கு முன் தர்மரக்ஷண ஸபை என்று ஒரு ஸபை ஸ்தாபிக்கப்பட்டது. முன் சென்னை ஹைகோர்டு ஜட்ஜாக இருந்து பென்ஷன் பெற்றுவரும் டாக்டர், ஸர். எஸ். சுப்பிரமணிய ஐயரவர்கள்தான் ஷை சபையின் அக்கிராசனாதிபதி. ஷை சபை ஏற்பட்டது முதல் இதுவரை, இராமேசுவரம், ஸ்ரீரங்கம், திருப்பதி முதலான பெரிய தேவஸ்தானங்களில் தர்ம சொத்துக்கள் கொள்ளை போகாமலும் அவைகளின் கணக்குகளை ஒழுங்காய்ப் பரிசீலனை செய்யவும் வரும்படிகளை தர்மவிஷயமாகவே செலவிடவும் சீர்திருத்தும் பொருட்டு இதுவரை 20 வியாச்சியங்கள் போடப்பட்டிருக்கின்றன. அவைகளில் 12 வியாச்சியங்கள் ஏற்கனவே அநுகூலமாய் முடிந்துவிட்டன. பாக்கி வியாச்சியங்கள் இன்னும் முடிவாகவில்லை. அது தவிர சிறிய தேவஸ்தானங்கள் விஷயமாய் இச்சபையாரே மூலகாரணமாயிருந்து ஊழல்களை வெளிக்குக் கொண்டுவந்தும் வேண்டிய யோசனைகளைச் சொல்லியும் உதவி புரிந்தும் அங்கங்கே அக்கரையுள்ள ஜனங்களைக்கொண்டு 320 நடவடிக்கைகள் நடத்தப்பட்டிருக்கின்றன. ஷை சபையின் 7-வது வருஷோற்சவம் 1914 ஞு டிஸம்பர் மீ 23வ சென்னையில் சிறப்பாய் நடந்தது. தர்மரக்ஷணத்தின் பொருட்டு முயற்சித்து வரும் இச்சபையானது மேன்மேலும் செழித்தோங்கும்படி ஈசன் அருள்செய்வாராக.

களும் கூட உத்ஸாகமடைந்து ஒவ்வொருவரும் தங்களால் இயன்றமட்டும் உதவிபுரிந்ததால் அந்தப்பாடசாலைக்கு நேர்ந்த நஷ்டம் நிவிர்த்தியாய் விட்டதாம். அப்படிப்பட்ட மஹாநுபாவரிடம் கல்விபயிலும் சிறுவர்கள் ஸத்குண ஸம்பன்னர்களாவார்கள் என்பதில் என்னசந்தேகம்?

தாழ்ந்த ஜாதியார்களின் குறை:—இந்தியர்களில் தீண்டாப் பேர்கள் என்றும் தாழ்ந்தஜாதியார்களென்றும் சொல்லப்படுகிறவர்களின்தொகை சுமார் 600லக்ஷம் ஆகிறது. இப்போது அவர்களுக்குள் அநேக சீர்திருத்தங்கள் ஏற்பட்டு வருகின்றனவென்பதைப் பார்க்கதேசாபிமானம் உள்ள ஒவ்வொரு இந்தியரும் மனமகிழ்ச்சி யடைவார்கள்என்பதில் தடையில்லை. சிலமாதங்களுக்குமுன் மதராஸ் கவர்னரவர்கள், ஸவாரி போயிருந்த காலத்தில் தாழ்ந்த ஜாதியார்கள் கூடி ஒரு உபசரிப்புப் பத்திரிகை வாசித்தார்கள். அதில் தங்களை உயர்ந்த ஜாதியார்கள் என்பவர்கள் மிகவும் இழிவாய் நடத்துகிறார்களென்றும், "தோணிக்காரன் கூட த்தன் தோணியில் மற்ற ஜாதியார்களுடன் நாய், பன்றி ஆடுமாடுகளை ஏற்றுகிறான், எங்களை மற்ற ஜனங்களுடன் ஏற்றுகிறதில்லை" என்றும் குறை சொல்லி முறையிட்டார்கள். ஸஹோதர பாவத்தையும் ஸம தர்சனத்தையும் அங்கமாகக்கொண்ட அத்வைத மதத்திற்கு உத்பத்தி ஸ்தானமாகிய நம்முடைய நாட்டில் இவ்விதமான குறை சொல்ல இடங்கொடுக்கலாமா? கடவுள் ஒருவரே; அவர் எல்லாவற்றிலும் இருக்கிறார், என்று வாயால் மட்டிலும் சொல்லிக்கொண்டு அநுஷ்டானத்தில் விபரீதமாக நடக்கிறோம். நமக்குக் கீழ்ப்படியிலுள்ளவர்களை, நாம் கைகொடுத்து உயர்த்தத் தயாராயில்லாதவரை, நம்மை உயர்த்த வேண்டுமென்று நமக்கு மேல்படியிலுள்ளவர்களை நாம்கேட்க நியாயமேது? இனியாவது தாழ்ந்த ஜாதியார்களுடைய குறைகளை விலக்க நாம் வழிதேடாவிட்டால் நம்முடைய தேசம் முன்னுக்கு வருவதெப்படி?

தாழ்ந்த ஜாதியார்களுக்காகப் பள்ளிக்கூடங்கள்:—சென்னைப் பட்டணத்தில் பிரஹ்மஞான சபையார்பஞ்சமர்களைப் படிப்பித்தற்காக ஐந்துபள்ளிக்கூடங்களை ஏற்படுத்தி பல வருஷங்களாக நடத்தி வருகிறார்கள் என்று இப்பத்திரிகை முன் ஒரு ஸஞ்சிகையில் சொல்லியிருக்கிறோம். கும்பகோணத்தில் பிரஹ்ம வித்யாலாட்ஜ் என்று பெயர்பூண்ட பிரஹ்மஞான சபையின் அங்கத்தினர்கள் பஞ்சமர்களுக்காக அந்தமாதிரி ஒரு பள்ளிக்கூடம் ஏற்படுத்தி யிருக்கிறார்களாம். அதுபோலவே மதனபள்ளியிலும் ஒரு பள்ளிக்கூடம் ஏற்படுத்தியிருக்கிறார்களாம். அந்தப் பள்ளிக்கூடத்தில் மாது ஸ்ரீ அன்னிபெசன்ட் அம்மாளவர்களின் ஜனன தினமான அக்டோபர் மீ 1உயில் பிள்ளைகளுக்கெல்லாம் புது வஸ்திரங்களும் தின்பண்டங்களும் வாங்கிக்கொடுத்துக் கொண்டாடினார்களாம். இன்னும் சில விடங்களிலும் பிரஹ்மஞான சபையாரால் அவ்விதமான பள்ளிக்கூடங்கள் ஏற்படுத்தி நடத்திவரப்படுகின்றன.

பாபட்லாவில் ஹிந்துபால ஸமாஜம்:—பாபட்லா என்னும் பட்டணத்தில் பள்ளிக்கூடத்துப் பிள்ளைகளுக்கு ஹிந்துமதத்தின் கொள்கைகளைக் கற்பிப்பதற்காக "ஹிந்துபால ஸமாஜம்" என்ற ஒருஸங்கம் ஏற்படுத்தப் பட்டிருக்கிறதாம். அதில் பள்ளிக்கூடத்துப் பிள்ளைகளுக்காக வென்றே மாது ஸ்ரீ அன்னிபெஸண்டு அம்மாளவர்களால் இயற்றப்பட்ட "ராஜாதி ராஜன் ஸ்ரீ ராம சந்திரன்" "மஹாபாரதம்" "ஹிந்துமதலக்ஷயங்கள்" "ஹிந்து மத தூஷண பரிகாரம்" என்னும்புஸ்தகங்களும்பகவத்கீதையும்கற்பிக்கப்பட்டுவருகின்றனவாம்.

அந்த ஸங்கத்தில் சேர்ந்த பிள்ளைகளுக்கு அந்தப்படிப்பில் ஒருசிரத்தை உண்டாக வேண்டியதற்காக அந்தப் பட்டணத்தில் உள்ள தனவான் ஒருவர் வருஷா வருஷம் அவர்களைப் பரீக்ஷை செய்து அந்தப் பரீக்ஷையில் முதன்மையாகத் தேறுகிற பையனுக்கு ஒரு தங்கப் பதக்கம் (Gold medal) பரிசு அளிப்பதாய் ஒப்புக் கொண்டிருக்கிறாராம். அதுபோல மற்ற இடங்களிலும் ஏற்பாடு செய்ய வேண்டியது அவசியம்.

படக்காட்சி மூலமாய் பிள்ளைகளுக்குக் கற்பித்தல்:—சிறு பிள்ளைகளுக்குக் கற்பிக்கும் விஷயங்களை வாய்மொழியாய் சொல்லிக் கொடுப்பதைக்காட்டிலும் புகைப்படக் காட்சி (Magic Lantern) மூலமாய் சொல்லிக் கொடுக்கும் பக்ஷத்தில் பிள்ளைகள் சுலபமாய் கிரஹிப்பதும் தவிர, அவர்களுடைய மனதில் நன்றாய்ப் பதிந்து மறந்துபோகாமலிருப்பதும் கண்டு பல இடங்களில் புகைப்படக்காட்சியின் உதவியைக்கொண்டு கற்பித்து வருகிறார்கள். பம்பாயிலுள்ள Panchangani Parsi Boys, High School என்னும் பள்ளிக்கூடத்தில் Kinemotograph படக்காட்சி மூலமாகக் கற்பிக்கும் பக்ஷத்தில் அதைவிட சிலாக்கியமாயிருக்கிறதென்று கண்டு அதை உபயோகப்படுத்துகிறார்களாம். அதன்றோ உண்மையான படிப்பு! குழந்தைகள் கிரஹிக்கும்படி கற்பிக்க மாட்டாதவர்கள் அவர்களைச் சிரமப்படுத்தி உருப்போடச்சொல்லிபாராமல்ஒப்புவிக்கச்செய்வதில் என்னபிரயோஜனம்? அதைக்காட்டிலும் கொடுமை வேறு கிடையாது.

சென்னை ராஜதானியில் ஐக்கியசங்கங்களின் அபிவிருத்தி:—வியாபாரங்களும் கைத்தொழில்களும் க்ஷீணித்துப்போன நம்முடைய இந்தியாவில் அவைகளைப் பலப்படுத்தவேண்டுமானால் அதற்குத் தேவையான பொருளை லக்ஷியமில்லாமல் ஏகதேசத்தில் போட்டு நடத்தக்கூடிய பிரபுக்கள் நம் தேசத்தில் சொற்பமாயிருப்பது பற்றி ஜனங்களுக்குள் ஐக்கிய ஸங்கங்கள் ஏராளமாய் ஏற்பட்டுத் தான் வியாபாரம், கைத்தொழில் வ்யவசாயம் முதலியவைகள் செழித்து நம்முடைய தேசம் மேன்மையை அடையவேண்டியதாக இருக்கிறது. அப்படி ஐக்கிய ஸங்கங்கள் விருத்தியாவதற்கு வேண்டிய ஸஹாயங்களை நம்முடைய ராஜாங்கத்தார் செய்து கொடுத்திருக்கிறார்கள். இந்தியா முழுவதும் அவ்விதமான ஸங்கங்கள் ஏற்பட்டு வருகின்றன. நம்முடைய சென்னை ராஜதானியில் 1913 ஞு ஜூன் மீ கடைசியில் 1078 ஸங்கங்களும் அவைகளில் 18000 மெம்பர்களும் மட்டிலும் இருந்தார்கள். 1914 ஞு ஜூன் மீ கடைசில் 1333 ஸங்கங்களும் அவைகளில் 10,537 மெம்பர்களும் இருக்கிறார்கள். எவ்வளவுக்கெவ்வளவு அப்படிப்பட்ட ஐக்கிய ஸங்கங்கள் விருத்தியாகின்றனவோ அவ்வளவுக்கவ்வளவு ஏழை ஜனங்களுக்கு உபகாரமாயிருக்கும். நம்முடைய தேசமும் மேன்மையை அடையும்.

இறந்துபோனவர்களுடன் ஸம்பாஷணை:—இப்போது உலகத்தில் பிரசித்திபெற்றவர்களாயுள்ள பௌதிக சாஸ்திர வித்வான்களுக்குள் சிறந்தவர் என்று கொண்டாடப்படும் ஸர் ஆலிவர் லாட்ஜ் என்பவர் சென்ற மாசத்தில் இங்கிலாந்தில் செய்த ஒரு பிரஸங்கத்தில் இறந்துபோனவர்களை சூக்ஷ்ம திருஷ்டியால் சந்தித்து, ஸம்பாஷிப்பது ஸாத்தியம் என்றும் தன்னுடைய இறந்துபோன சில ஸ்நேஹிதர்களுடன் தான் அவ்விதமாக ஸம்பாஷித்ததாகவும் வெளியிட்டார்களாம்.

வேஸவானந்தன்.

341

* தியானக்கிரம விஷயம்

ஜனவரிமாசம்.

மாசாந்தர அப்யாஸம்:—ஸர்வ வல்லமையுள்ள ஈசுவரன் உன்னிடமிருக்கிறார். அதனால், நீ தீவ்ரமாய் மட்டும் இச்சிப்பாயானால் உன்னால் செய்யமுடியாதது ஒன்றுமில்லை.

வார அப்யாஸம்.

1-வது வாரம்:—ஈசுவரனுடைய அன்பின் பிரவாஹம் மனிதர்களை அடைதலுக்கு, நீ ஒரு வாய்க்காலாக அமையவேண்டி, ஈசுவரனுடன் ஐக்யமாக இச்சி.

2-வது வாரம்:—உன் சரீரம் எதையாவது அடைய விரும்பினால், நீ அதை யதார்த்தமாக விரும்புகிறாயா என்பதைக் கவனித்துப் பார். ஏனென்றால் நீ ஈசுவராம்சமான படியால், ஈசுவரன் எதைச்சிந்திக்கிறாரோ, அதைத்தான் நீயும் சிந்திப்பாய்.

3-வது வாரம்:—நாம் விகாஸ முறைக்கு அநுகூலமாக விருக்கலாம். அல்லது தடங்கலாகவிருக்கலாம். ஈசுவர ஆக்ஞைக் குட்பட்டு நடக்கப் பாத்ரவானாகலாம். அல்லது அவரை யெதிர்க்கலாம்.

4-வது வாரம்:—ஈசுவர சைதந்யம் உன்னிட மிருப்பதுபோல், உன் அயலார்களாகிய ஸஹோதரர்களிடமு மிருக்கிறது. அவர்களிடமுள்ள அந்த ஈசுவர சைதந்யத்தை மலரச்செய்வதன் மூலமாகவே, அவர்களுக் குதவிசெய்து, அவர்களின் நிலைமையை உயர்த்தி முயலுவாய்.

5-வது வாரம்:—ஸத், சித், ஆநந்தம் என்பவை ஸர்வேசுவரனின் மூன்று அம்சங்கள். ஈசுவரனுக்குத் தொண்டுபுரிய வேண்டுமென்று இச்சிப்பவர்கள், மேற்கூறிய அம்சங்களை யடைதற் கேதுவான கர்மம், பக்தி, ஞானம் என்ற மும்மார்க்கங்களையும் இவ்வுலகில் கடைப்பிடித்தல் வேண்டும்.

---

* "ஸற்குரு சரணங்களில்" என்ற ஞான நூலினின்று, குறிப்பான வசனங்களைத் தியானத்திற்காகத் தொகுத்திருக்கிற ஆங்கிலப் புஸ்தகத்தின் தமிழ் மொழி பெயர்ப்பு.

திநவரி அப்யாஸம்.

(1) ஈசுவரனுடைய அன்பின் பிரவாஹம் மனிதர்களை யடைதலுக்கு நீ ஒரு வாய்க்காலாக அமையவேண்டி, ஈசுவரனுடன் ஐக்யமாக இச்சி.

(2) ஈசுவரன் அன்பே யாதலால், நீ ஈசுவரனுடன் ஐக்யமாக வேண்டுவதற்கு, நீ தன்னயம் அற்றவனாகவும் அன்பு நிறைந்தவனாகவும் இருத்தல் அவசியம்.

(3) ஈசுவரனுடன் ஐக்யமாக இச்சித்தல் தான் ஸாதாரணமாய் அன்பென்று சொல்லப்படுகிறது. அன்பென்பது இச்சை யென்று மட்டும் சொல்லுதல் அவ்வளவு பொருந்தாது. ஆனால் அதைத் திடசங்கற்பம் (உறுதியான தீர்மானம்) என்றே சொல்லலாம்.

(4) அன்பு என்பது ஈசுவரனுடன் எப்போதும் ஒருமையுணர்வைக் கொள்வதன் மூலமாய், அதாவது அநந்யபாவத்தைக் கொள்வதன் மூலமாய், ஈசுவர ஸங்கல்பத்தின்படியே நாமும் திடசங்கற்பங் கொள்ளுதலாகும். அவரிடத்துள்ள பேரன்பினால், அவர் செய்வதைப் போலவே நீயும் செய்வாய், அவரைப்போலவே நீயும் நடப்பாய்.

(5) மேன்மார்க்கத்திலுள்ள ஒருவன் ஈசுவரன் கையிலுள்ள பேனாவாகிறான். அவன் மூலமாகவே ஈசுவரனுடைய எண்ணம் வெளிப்படுகிறது.

(6) அன்பு மேலிட்டு மேன்மார்க்கத்தில் ஒழுகுகிறவனை, ஈசுவரனின் அன்பாகிய ஒளியை உலகத்தில் எப்போதும் தன் கிரணங்களால் பிரகாசித்துக்கொண்டிருக்கும் அக்கினிஜ்வாலைக்கு உவமித்தல் பொருந்தும்.

(7) "ஸர்வம் கல்விதம் ப்ரஹ்ம" என்ற பிரகாரம் "எல்லாம் ஒன்றே" யாகையால், அவ் வொன்றாகிய ஈசுவரனின் ஸங்கல்பம் தான், ஒருவரைப்போலவே எல்லோருக்கும் நிஜமான இன்பத்தை விளைக்கக்கூடும். ஆகையால் ஈசுவர சங்கற்பத்தையே அனைவரும் நாடக்கடவர்.

(8) உன் சரீரம் எதையாவது அடைய விரும்பினால், நீ அதை யதார்த்தமாக விரும்புகிறாயா என்பதைக் கவனித்துப்பார். ஏனென்றால் நீ ஈசுவராம்சமான படியால், ஈசுவரன் எதைச் சிந்திக்கிறாரோ, அதைத்தான் நீயும் சிந்திப்பாய்.

(9) மனிதர்கள் நித்ய, அநித்ய வஸ்துக்களின் விவேகம் அடையும்வரை, ஈசுவரன் பக்ஷமுள்ள அணியைச் சேர்ந்தவர்களாகார்.

(10) உன்னுடைய நிஜ ஸ்வரூபம், ஈசுவரனாகிய மஹா தேஜஸ்ஸினின்று வெளித்தோன்றிய ஒருபொறி என்னலாம். அதாவது நீ ஈசுவரனுடைய அம்சம்.

(11) ஸர்வ பராக்ரமசாலியான ஈசன் உனக்குள்ளேயே இருக்கிறார்.

(12) அதனால், உன் இஷ்டம் தீவ்ரமாகமட்டும் இருக்கும் பக்ஷத்தில், உன்னால் செய்து முடிக்கக்கூடாத காரியம் ஒன்றுமேயில்லை.

(13) "நான் ஒரு மனிதனேயாயினும், மநுஷ்ய ரூபமாயுள்ள ஈசுவரனே யாகையால், இக்காரியம் என்னால்செய்யக்கூடும், இதைக் கட்டாயம் செய்தே தீர்ப்பேன்," என்று உனக்குள்ளேயே சொல்லிக்கொள், அதாவது உறுதிகொள்ளு.

(14) விவேக மில்லாதவனே தன்னைப் பெரியவனாக நினைத்துக்கொள்ளுகிறான். "நான் இதைச் செய்தேன். அப்பெருங் காரியத்தைச் செய்தேன்." என்று எண்ணிக்கொள்ளுகிறான். ஞானவானோ, அதாவது விவேகமுள்ளவனோ, ஈசுவரன் ஒருவரே பெரியவரென்றும், நற்காரியங்களனைத்தும் அவராலேயே நடை பெறுகின்றனவென்றும் அறிவான்.

(15) நாம் விகாஸமுறைக்கு அநுகூலமாக விருக்கலாம் அல்லது தடங்கலாக விருக்கலாம். ஈசுவர ஆக்ஞையை நிறைவேற்றலாம் அல்லது அவரை யெதிர்க்கலாம்.

(16) "நாம் எவ்விதம் நடந்துகொள்வது ஈசுவர ஸம்மதம்?" என்னும் அறிவே, ஸன்மார்க்க முறையை நாடுபவர் கவனிக்கவேண்டிய முதன்மையான விஷயம்.

(17) ஈசுவரன் விகாஸமுறை என்ற நியதிக் கிரமத்தின்படி நம்மை ஆளுகிறார். ஒருதடவை மனிதன் விகாஸமுறையின் விதியை நிதர்சனமாகத்தெரிந்துகொண்டால், அதை நிறைவேற்றுதற்காகத் தன்னாலானமட்டும் உழைப்பான். அவ்வழியை விட்டும் வில

கான். ஏனெனில் அவ்வழியானது அத்தகைய மஹிமை பொருந்தியது.

(18) மனிதன் எத்தருணம் நேரான ஞானோதயம் பெறுகிறானோ, அப்போது ஈசுவரனின் பக்கமே இருந்துகொண்டு, நல்ல காரியங்களைச் செய்தும், தீயகாரியங்களை விலக்கியும், விகாஸமுறைக்கு அநுகூலமாகவும், சுயநலத்துக் கல்லாமலும் உழைக்க ஆரம்பிப்பான்.

(19) ஒருவன் அவ்விதம் ஈசுவரன் பக்ஷமாக நடப்பானாகில், அவன் வெள்ளியம்பலத்தைச்சேர்ந்தவனாகிறான். அவன் ஹிந்து, பௌத்தன், கிறிஸ்தவன், அல்லது மஹம்மதியன் என்பவைகளில் எப்பெயர் பூண்டவனாயிருந்தாலும் என்ன?

(20) ஈசுவரன் பக்ஷமுள்ளவர்கள், அவர்கள் இவ்வுலகில் இருப்பது எந்த பரமார்த்த விஷயத்திற்காக என்றும், அந்நிலைமையில் அவர்களுடையகடமை என்னவென்றும் அறிந்துகொண்டு, அக்கடமையைச் சரிவர நிறைவேற்றவும் முயன்று வருகிறார்கள்.

(21) உனக்குள்ளிருக்கும் ஈசுவரனை, நீ ஆழ்ந்து உள்நோக்கிச் சென்று பார்த்து, ஈசுவரன் வாக்கைக் கேட்கவேண்டும். அது தான் நிஜமாகவே உன் வாக்கு.

(22) உன் ஸஹோதரனிடத்து குப்தமாயிருக்கும் ஈசுவராம்சத்தைப் பிரகாசப்படுத்தும் வழியைத் தெரிந்துகொள். அவனையே அவ்வீசுவராம்சத்தை எப்படி நன்குணரச் செய்யலாம் என்பதையும், தீர்க்காலோசனைசெய்து தெரிந்துகொள். இவ்விதம், உன் ஸஹோதரனைத் தவறான வழியினின்று தப்புவிக்கலாம்.

(23) ஈசுவரசைதன்யம் உன்னிட மிருப்பதுபோல், உன் அயலார்களாகிய ஸஹோதரர்களிடமு மிருக்கிறது. அவர்களிடமுள்ள அந்தஈசுவர சைதந்யத்தை மலரச்செய்வதன் மூலமாகவே அவர்களுக் குதவிசெய்து, அவர்களின் நிலைமையை உயர்த்த முயலுவாய்.

(24) மேல் பார்வையில் எவ்வளவு தீயதாகக்காணப்படினும், ஒவ்வொரு ஜீவராசியிலும், வஸ்துவிலும், ஈசுவர னிருத்தலைத் தெரிந்துகொள்ளக் கற்றுக்கொள்.

(25) முக்கியமாக அன்புக்கு விரோதமாக நடைபெறும் தீய காரியங்கள் மூன்று:—(1) வம்புபேசுதல். (2) துன்பம் செய்தல். (3) மித்யாசாரம். ஈசுவரனிடம் பேரன்பு நிறைந்த ஒருவன், தன்னை இவைகள் அணுகவொட்டாமல், இடையறாது பாது காத்துக் கொள்ள வேண்டும்.

(26) வேட்டை விளையாட்டென்று பெயர் வைத்துக்கொண்டு ஈசுவர ஸ்ருஷ்டியாகிய ஜீவஜந்துக்களைக் கொல்லுபவர்களின் கதியும் குரூரக் கொலை செய்பவர்களுடைய கதியும் ஒன்றே.

(27) எங்கும் நிறைந்துள்ள ஈசன்மேல் அன்புள்ளவனும், சமயம் வாய்க்கும் போதெல்லாம், ஜீவகாருண்யத்தின் சிலாக்யத்தை யும், ஜீவஹிம்ஸையின் இழிவையும் தைர்யமாய் எடுத்துரைக்க வேண்டும்.

(28) கொடிய மித்யாசாரத்திற்குட் பட்டு, அன்பின் வடிவ மான ஈசுவரன் பெயரை வைத்தே அநேக பாதகங்களைப் பலர் அறியா மையாற் செய்கிறார்கள். ஆகையால் நீ மிகவும் ஜாக்ரதையாயிரு. அதின் அற்ப சின்னங்கள் கூட உன்னிடத்தில் இருக்கவேண்டாம்.

(29) ஸத், சித், ஆனந்தம் என்பவை ஸர்வேசுவரனின் மூன்று அம்சங்கள்.

(30) ஈசுவரனுக்குத் தொண்டுபுரிய வேண்டுமென்று நீ இச் சிப்பாயானால், மேற்கூறிய அம்சங்களை அடைதற்கேதுவான கர்மம் பக்தி, ஞானம் என்ற மும்மார்க்கங்களையும் இவ்வுலகில் கடைப் பிடித் தல் வேண்டும்.

(31) அன்பே ஈசுவரன் என்ற பிரகாரம், ஞானத்தின் உரு வே ஈசுவரன் என்பதும் உண்மையே. ஆகையால் எவ்வளவுக் கெவ் வளவு நீ ஞானவானாகிறாயோ, அவ்வளவுக் கவ்வளவு ஈசுவர ஸாந்நித் யம் உன்னிடத்தில் விளங்கும்.

பிப்ரவரி மாசம்.

மாஸாந்தர அப்யாஸம்:—குருநாதனுடைய பரிசுத்த ஸந்நிதியில், குருநாதனைப்போலாக வேண்டுமென்ற இச்சை தவிர, மற்ற ஆசைகளெல்லாம் நாசமடைகின்றன.

வார அப்யாஸம்.

1-வது வாரம்:—குருநாதன் எவைகளைச் செய்வார், பேசுவார், நினைப்பார் என்று நீ எண்ணுகிறாயோ, அவைகளை நீ செய்யவும், பேசவும், நினைக்கவும் வேண்டும். மற்றவைகள் விலக்கப்பட வேண்டியவைகள்.

2-வது வாரம்:—குருநாதன், அவரது சக்தியைத் தம் சிஷ்யன் மூலமாகவே மற்றவர்களுக்கனுப்பும்படியான சந்தர்ப்பங்கள் அடிக்கடி நேரும். சிஷ்யன் மநத்தளர்ச்சிக்கு இடங்கொடுப்பானாகில் குருநாதன் அவ்விதம் செய்ய முடியாது. ஆகையால் எப்போதும் ஸந்தோஷமுள்ளவனாயிருத்தல் வேண்டும்.

3-வது வாரம்:—நீ உன் குருநாதனைத் தியானித்து நன்குணர்ந்தும், அவரை நிச்சய புத்தியுடன் நம்பவும் வேண்டும். ஏனெனில் இவ்விதம் முடியாவிட்டால், அவர் உனக்கு ஸஹாயம் செய்யவும் முடியாது. பூர்ண நம்பிக்கை ஏற்படாத வரையில் அவருடைய அன்பும் சக்தியும் உன்னிடம் வரா.

4-வது வாரம்:—நீ செய்யும் வேலையொன்றை, குருநாதன் உன்முன் தோன்றிப் பரீக்ஷிப்பாராயின் எவ்வளவு ஜாக்ரதையாய்ச் செய்வாயென்று நினைத்து, அவ்விதமே எல்லா வேலைகளையும் திருந்தச் செய்ய வேண்டும்.

எக்கருமத்தையும், அவர் நிமித்தமாக நீ செய்யவேண்டும்.

திநசரி அப்யாஸம்.

(1) குருநாதன் எவைகளைச் செய்வார் பேசுவார் நினைப்பார் என்று நீ எண்ணுகிறாயோ, அவைகளை நீ செய்யவும், பேசவும், நினைக்கவும் வேண்டும். மற்றவைகள் விலக்கப்படவேண்டியவைகள்.

(2) குருநாதன் எனக்களித்த போதனைகளை நீங்களும் அநுஸரித்து வருவீர்களாகில் அவைகள் உங்களுக்கும் பிரயோஜனகரமாயிருக்கும்.

(3) குருநாதனுடைய உபதேசங்களைக்கேட்டல் மட்டும் போதாது. அவர்சொல்லும் ஒவ்வொரு வார்த்தையையும் ஒவ்வொரு குறிப்பையும் கவனமாய் கிரஹித்து, அதன்படி நீ நடக்கவேண்டும். அவைகளைக் காரியத்திற் கொள்ளவேண்டும்.

(4) சிஷ்யன் குருநாதனோடு ஒருமைப்பட்டவன். அவன் தன் எண்ணத்தை, குருநாதன் எண்ணத்தோடு சேர்த்து மாத்திரம் பார்க்கவேண்டியது. அவருடையது தன் எண்ணத்துடன் ஒருமைப்பட்டதா படாததா என்பது உடனே தெரியவரும்பொருட்டு அவ்விதம் சிஷ்யன் செய்யவேண்டும்.

(5) ஸித்திகளுக்காசைப் படாதே. உனக்கவைகள் வேண்டியது நன்மை அல்லது அவசியமென்று குருநாதன் அறியுங்காலத்தில் அவைகளுனக்கு வரும்.

(6) ஸத்குரு தரிசனம் நேருக்கு நேரே கிடைப்பதற்கு முந்தி, ஆசையின்மையை நீ அப்பஸித்து அடைதல் நலம். நீ அப்பஸித்தால் அடைதலும் ஸாத்தியமே.

(7) சுயநயமற்றதும், பரோபகாரமுமான எந்த வேலையும் குருநாதனுடையதே. அதை நீ அவர் நிமித்தம் செய்யவேண்டும்.

(8) குருநாதன், அவரது சக்தியைத் தம் சிஷ்யனின் மூலமாகவே மற்றவர்களுக்கனுப்பும்படியான சந்தர்ப்பங்கள் அடிக்கடி நேரும். சிஷ்யன், மநத்தளர்ச்சிக்கு இடங்கொடுப்பானாகில், குருநாதன் அவ்விதம் செய்ய முடியாது. ஆகையால் எப்போதும் ஸந்தோஷமுள்ளவனாயிருத்தல் வேண்டும்.

(9) உன்னை நீ குருநாதனுக்கு அர்ப்பணஞ் செய்துகொண்ட காரணத்தினாலேயே, உனது கர்மபந்தம் சீக்கிரம் முடிவு பெறவேண்டுமென்று நீ கேட்டதாகிறது. ஆகையால் நூறு ஜன்மங்களில்

தொடர்ந்து அநுபவிக்கவேண்டிய கர்மத்தை இரண்டொரு ஜன்மங்களில் இப்போது நீ அநுபவிக்க வேண்டியதாய் நேரிடுகிறது. இந்தச் சொற்ப ஜன்மங்களை இலகுவாய்த் தள்ளிவிட, கருமபலன்கள் தீவ்ரமாய் உனக்கு நேருமாகையால், அவைகளைக் களிப்புடனும் சந்துஷ்டியுடனும் பொறுத்துக் கொள்ளவேண்டும்.

(10) வெளி உபத்ரவங்களாகிய விசனம், துன்பம், வியாதி, நஷ்டம் இவைபோன்ற விஷயங்களால் மனிதனுக்கு ஒரு பாதகமுமில்லையென்று குருநாதன் உபதேசிக்கின்றார். மநச் சமாதானத்தை இவைகள் கெடுத்துவிடாமல் மாத்திரம் பார்த்துக்கொள்ள வேண்டும்.

(11) நீ உன் கெட்ட கர்மங்களின் பலன்களை அநுபவித்துத் தீர்ந்து ஸ்வதந்த்ரனாக ஏற்படாத வரையில், குருநாதனுக்கு நீ உபயோகமுள்ளவனல்லவென்று ஞாபகத்தில் வைத்துக்கொள். உன் கர்மத்தை சந்துஷ்டியுடன் பொறுத்துக்கொள்ளவேண்டும்.

(12) உன் மாநஸிக சரீரம் ஸ்வப்ரயோஜனத்தையே மதித்து குருநாதன் கைங்கர்யத்தை நினைக்கவும், பிறர்க்குதவி செய்யவும் ஒட்டாமல் முயற்சிக்கின்றது.

(13) அநேகர்கள் தங்களுடைய இச்சைகளையே தாங்களென்று நினைத்திருக்கிறார்கள். தங்களிடத்திலுள்ள வெவ்வேறான இச்சைகளும் விருப்பு வெறுப்புக்களும் போய்விட்டால் தங்களுடைய இருப்பே போய்விட்டதாக எண்ணுகிறார்கள். இத்தகையர்கள் குருநாதனைத் தரிசியாதவர்கள்.

(14) குருநாதனுடைய பரிசுத்த ஸந்நிதியில் குருநாதனைப் போலாக வேண்டுமென்ற இச்சைதவிர மற்றஆசைகளெல்லாம் நாசமடைகின்றன.

K. S. இராமசந்திர ஐயர்.